# நற்றிணை : அடைவும் ஆய்வும் (Naṟṟiṇai: Directory and research)

க.பாலாஜி | G. Balaji[25]

**Abstract:** The paper to review the redactions and publications of the naṟṟiṇai one of the eight anthologies of the ancient cankam literature. The editors that they how to read and bibliography of this work in the years between from 1914 to 2019.

*18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 19-ஆம் நூற்றாண்டின் மையம் வரையிலான காலப்பகுதியினைத் தமிழ்ச்செவ்வியல் பனுவல்களின் முதற்பதிப்புக் காலக்கட்டம் எனலாம். ஓலைச்சுவடிகள், அரியகையெழுத்துப் பிரதிகளிலிருந்து அச்சுப் பதிப்பாக்கம் பெற்ற சங்கப்பனுவல்கள் உரையாக்கம் என்ற விரிவான தளத்திற்கு நகர்ந்த பொழுது பரந்துபட்ட வாசிப்பிற்கும் சமூக, சமயப் பார்வைக்கும் உட்படுத்தப்பட்டு பல்வேறு ஆக்கங்களாக வெளிவந்தன. இவ்வாக்கங்கள் புலவனின் படைப்பாக்கக் காலக் கருத்தியலில் முழுமையாக ஒன்றியமைந்திருந்தது எனக் கூறவியலாது. உரையாசிரியர்கள்தம் புலமையின்பாற்பட்ட தற்சார்பு நிலையிலும் அவர்கள் இயங்கிவந்த சமூக, சமய, அரசியல் நிறுவனப் பின்புலங்களிலும் பதிப்பித்து வெளியிடப் பெற்றன. இவ்வேறுபாடுகள் ஒருபுறமிருக்க முதற்பதிப்புக் காலக்கட்டத்திலும் அதற்குப்பிறகும் குறிப்பிட்ட ஒரு நூலுக்கான பல சுவடிகள், பிரதிகள் ஆங்காங்குச் சேகரிக்கப் பெற்றமையினால் பதிப்பாசிரியர்கள் அவற்றை மறுபதிப்பாக்கம் செய்த பொழுது பதிப்புகளில் பொருத்தமற்ற பாடங்கள் பிரதிபேதங்களாகத் தொடர்ந்து குறிக்கப்பெற்று வந்தன. சில பதிப்பாசிரியர்கள் முதற்பதிப்புக் காலக்கட்டத்திற்குப் பிறகான புதிய சுவடிகள், பிரதிகளின் வரவினால் குறிப்பிட்ட நூலுக்குப் புதிய பதிப்பினைச் செய்தனர்.*

*மேற்குறித்த நிலையில் எட்டுத்தொகை நூலான நற்றிணைக்கு எழுந்துள்ள பதிப்புகளையும் வெளியீடுகளையும் அடைவுபடுத்தி 19-ஆம் நூற்றாண்டு உரையாசிரியர்கள் நற்றிணையினை எவ்வாறு பதிப்பித்தும் வாசித்தும் அடைவு படுத்தியுள்ளனர் என ஆய்வுசெய்யும் முகமாக இவ்வுரை அமைகின்றது. இவ்வாய்விற்கு 1914-இல் இருந்து 2020 வரை வெளிவந்துள்ள நற்றிணைப் பதிப்புகளும் வெளியீட்டு நூல்களும் எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன.*

*குறிச்சொற்கள் : நற்றிணை, அடைவு, ஆய்வு, Naṟṟiṇai, Directory, research*

*Citation:பாலாஜி க., (February 2021), "நற்றிணை : அடைவும் ஆய்வும் (Naṟṟiṇai: Directory and research)", IIETS (Inam: International E-Journal of Tamil Studies) (ISSN:2455-0531), Vol.6, Issue 25, pp.37-15*

**நற்றிணை : காலவரிசைப் படுத்தப்பெற்ற பதிப்பு வரலாற்று அடைவு**

எட்டுத்தொகை நூல்களில் நற்றிணை, குறுந்தொகை இவ்விரு நூல்களுக்கும் பழைய உரைகள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. 1914-ஆம் ஆண்டு பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயரால் உரையெழுதப்பெற்று சென்னை சைவவித்யாநுபாலன யந்திரசாலையில் அச்சிறப்பதிப்பித்து 1915-ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றதே நற்றிணைக்கு எழுந்த முதல் பதிப்பும் உரையும் ஆகும். பின்னத்தூராருக்கு முன்பு உ.வே.சாமிநாதையரால் நற்றிணைப் பதிப்பு முயற்சி ஒன்று நிகழ்ந்துள்ளது. இதனை 1989-இல் உ.வே.சா. நூல் நிலையம் வழி வெளிவந்த எச்.வேங்கடராமனின் பதவுரைப் பதிப்பு முகவுரை மூலம் அறிய முடிகின்றது. பின்னத்தூராரின் முதற் பதிப்பாக்கத்திற்குப் பின்பு நற்றிணை இரு நிலைகளில் பதிப்பாக்கம் பெற்றது.

1. மூலம் மட்டும் கொண்ட பதிப்பு.
2. மூலமும் உரையும் கொண்ட பதிப்பு.

[25] தமிழ் - உதவிப் பேராசிரியர், பூ.சா.கோ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், balajiand@gmail.com

ஓலைச்சுவடிகள், கையெழுத்துப் பிரதிகளை ஆய்வுசெய்து பதிப்பியல் முறைமைகளோடு செய்யப் பெற்றவைகளை 'பதிப்புகள்' என்ற வரையறைக்குட்படுத்தி ஏனையவைகளை வெளியீடுகள் என்ற வரையறைக்குள் வைத்து நோக்கினால் இதுவரை நற்றிணைக்கு 28 நூல்கள் வெளிவந்துள்ளன. சங்க இலக்கிய மகாசமாஜப் பதிப்பும்(1940) மர்ரே சாக்கை ராஜம் பதிப்பும்(1957) மூலம் மட்டும் கொண்ட பதிப்புகளாக அமைகின்றன. இதுவரை நான்கு மொழிபெயர்ப்புகள் நற்றிணைக்குச் செய்யப் பெற்றுள்ளன.

பின்னத்தூராரால் எழுதப்பெற்ற நற்றிணையின் முதலுரை பொழிப்புரையாக அமைந்தது. அதனைத் தொடர்ந்து இப்பொழிப்புரை 1952-இல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் மூலங்களிலும் உரைகளிலும் சிறிய கட்டமைப்பு மாற்றங்கள் செய்து வெளியிடப்பெற்றது. சிறிய திருத்தங்கள் செய்யப் பெற்றமையோடு பின்னத்தூராரால் கண்டறிய இயலாத பாடல் எனக்கருதப்பெற்ற 234-வது பாடலைக் கண்டறிந்து பின் இணைப்பாக வெளியிட்டது. இப்பதிப்பு கழகத்தாரால் 1956-இல் எவ்வித மாற்றங்களும் செய்யப்பெறாமல் மறுபதிப்பாக்கம் செய்யப் பெற்றுள்ளது. 1962-இல் கழகம் மீண்டும் இப்பதிப்பினைப் பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனாரின் இலக்கணக்குறிப்பு மற்றும் ஆய்வுரையோடு வெளியிட்டது. 1956-ல் புலவர் கா.கோவிந்தன் தேர்ந்தெடுக்கப்பெற்ற நற்றிணையின் சில பாடல்களுக்கு உரை எழுதியுள்ளார். 1966(1-200), 1968(201-400) ஆகிய ஆண்டுகளில் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையினால் நற்றிணைக்குப் புதிய ஆய்வுரை ஒன்று செய்யப் பெற்றுள்ளது. முதற்பதிப்புக் காலக்கட்டத்திற்குப் பிறகு கிடைக்கப் பெற்ற ஓலைச்சுவடிகளை மையமாகக் கொண்டும் பாடவேறுபாடுகளின் மிகுதி கருதியும் புதியபதிப்புச் செய்யவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இப்பதிப்புச் செய்யப் பெற்றுள்ளது எனக்கருத முடிகின்றது. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை தனக்குக் கிடைத்த சுவடிகளின் பாடங்களை முந்தைய பதிப்புப் பாடங்களோடு ஒப்பிடுகையில் 1500-கும் மேற்பட்ட பாடவேறுபாடுகள் அறியப்பட்டமையால் இப்பதிப்புச் செய்யப் பெற்றதாகத் தனது பதிப்பின் முகவுரையில் தெரிவித்துள்ளார். பின்னத்தூரார் பாடங்களிலிருந்து வேறுபடும் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையின் பாடங்களினாலேயே மிகுதியான பாடவேறுபாடுகள் அறியப் பெறுகின்றன. 1989-இல் உ.வே.சா. பதிப்பகத்தின் வழி வெளிவந்த எச்.வேங்கடராமனின் பதவுரைப் பதிப்பு பின்னத்தூராரின் பாடங்களையும் உரைகளையும் அவ்வாறே அடியொற்றிச் செய்யப் பெற்றுள்ளது எனக் கருதலாம்.

1967-இல் பாரி நிலையம் வழி புலியூர்க்கேசிகனின் நற்றிணை உரை இரு தொகுதிகளாக வெளியிடப் பெற்றது. புலியூர்க்கேசிகன் தமது உரையில் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை இவ்விருவரின் உரைக்கருத்துகளையும் ஏற்பதோடு சிலவிடங்களில் மாற்று உரைக் கருத்துகளைத் தருகின்றார். ஏனைய நற்றிணை வெளியீட்டு ஆசிரியர்களைப் போலல்லாமல் மர்ரே சாக்கை ராஜம் பதிப்புப் பாடங்களைப் பலவிடங்களில் ஏற்று உரைவிளக்கமளிக்கின்றார். 1986-இல் மு.ரா.பெருமாள் முதலியார் நற்றிணையின் தேர்ந்தெடுக்கப்பெற்ற 75 பாடல்களைப் புதிய வடிவில் அமைத்து வெளியிட்டுள்ளார். 1986-இல் லேனா தமிழ்வாணனைப் பதிப்பாசிரியராகக் கொண்டு நற்றிணை இரு தொகுதிகளாக வெளியிடப் பெற்றுள்ளது. பாடல்களின் சிறந்த தொடர்களைப் பாடல்களுக்குத் தலைப்பாக்கிப் பாடற்கருத்துகளைச் சுருக்கவிளக்கமாகத் தந்துள்ளது இவ்வெளியீடு. 1999- இல் வர்த்தமானன் பதிப்பகம் புலவர் நா.இராமையா பிள்ளையினை உரையாசிரியராகக் கொண்டு நற்றிணையை வெளியிட்டுள்ளது. 2003-இல் கோவிலூர் மடாலயம் கதிர்மகாதேவனை உரையாசிரியராகவும் தமிழண்ணல், சுப. அண்ணாமலை ஆகியோரைப் பதிப்பாசிரியர்களாகவும் அமைத்து நற்றிணையை மக்கள் பதிப்பாக வெளியிட்டுள்ளது. இப்பதிப்பின் முதன்மை நோக்கம் கொண்டுகூட்டு உத்தியைப் பயன்படுத்தி உரையெழுதுதல் என்பதாகும். பின்னத்தூரார் பதிப்பின் உரைக் கருத்துகளை இப்பதிப்பு ஏற்று நிற்கின்றது. 2004-இல் புதுயுக நூல் வெளியீட்டகம் கு.வெ. பாலசுப்பிரமணியனை உரையாசிரியராகவும் அ.மா.பரிமணத்தைப் பதிப்பாசிரியராகவும் கொண்டு நற்றிணையினை வெளியிட்டுள்ளது. நூலுக்கான முன்னுரைப் பகுதியில் பின்னத்தூரார் பதிப்புப் பாடங்களிலிருந்து பாடம் மாறுபடும் இடங்களும் உரைமாறுபடும் இடங்களும் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது கவனத்திற்குரியதாக அமைந்தாலும் சிலவிடங்களில் பாடங்களும் அதற்கான உரைப் பகுதியும் மாறுபட்டமைகின்றன. 2006-இல் மணிவாசகர் பதிப்பகம் ச.வே.சுப்பிரமணியனைப் பதிப்பாசிரியராகக் கொண்டு சங்க இலக்கிய மூலத்தை மட்டும்

வெளியிட்டுள்ளது. 2008-இல் மீண்டும் ச.வே.சுப்பிரமணியனைப் பதிப்பாசிரியராகக் கொண்டு மணிவாசகர் பதிப்பகத்தின் வழியாகத் ‘தமிழ்ச்செவ்வியல்நூல்கள்’ என 41 நூல்களின் தொகுப்பு வெளியிடப் பெற்றுள்ளது. 2009-இல் மெய்யப்பன் பதிப்பகம் ச.வே.சுப்பிரமணியனை உரையாசிரியராகக் கொண்டு நற்றிணையை வெளியிட்டுள்ளது. 2009-இல் திருமகள் நிலையம் வ.த.இராமசுப்பிரமணியம் உரையோடு நற்றிணையை வெளியிட்டுள்ளது. அதே ஆண்டு சாரதா பதிப்பகம் அ.ப.பாலையனை உரையாசிரியராகக் கொண்டு நற்றிணையை வெளியிட்டுள்ளது. ஆசிரியர் இந்நூலைப் பதிப்பிக்கப் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், புலியூர்க்கேசிகன், கு.வெ. பாலசுப்பிரமணியன் ஆகியோரது பதிப்புகளையும் உரைகளையும் பயன்கொண்டுள்ளார்.

2010-இல் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் ம.வே.பசுபதியைப் பதிப்பாசிரியராகக் கொண்டு செம்மொழித்தமிழ் இலக்கண இலக்கியங்களின் மூலங்களை மட்டும் பதிப்பித்துள்ளது. இந்நூலை உருவாக்குவதற்கு ஆசிரியர் தான் பயன்கொண்ட பதிப்புகள், உரைகள் பற்றிய குறிப்புகளைத் தரவில்லையெனினும் நற்றிணைப் பதிப்பாசிரியர்கள் தங்கள் பதிப்புகளில் குறித்துள்ள பிரதிபேதங்களைப் பாடலின் அடிக்குறிப்பில் தொகுத்தளித்துள்ளார். அவற்றிலும் சில வேறுபாடுகள் அமைந்துள்ளன.

மேற்கண்ட நற்றிணை நூல்களைப் போலன்றி ப.ஆறுமுகம் என்பவர் 2010-இல் மூலங்கள், கூற்று, திணை முதலியன இன்றிப் ‘பாட்டும் தொகையும் என் உரை’ என்னும் தலைப்பில் சங்க இலக்கியங்களுக்குக் காண்டிகையுரை எழுதியுள்ளார்.

2017-இல் எஸ்.ஜெகத்ரட்சகன் நற்றிணைக்கு எளிய உரை ஒன்று எழுதியுள்ளார். இது ஆழ்வார்கள் ஆய்வுமையம் என்ற வெளியீட்டு நிறுவனத்திலிருந்து வெளிவந்துள்ளது.

2019-இல் பிரபாகரபாபு என்பவர் நற்றிணைக்குப் புதுக்கவிதை வடிவில் எளியவுரை ஒன்று எழுதியுள்ளார். இது சென்னைத் தமிழ்க்கவிப் பதிப்பகத்தின் வழியாக வெளிவந்துள்ளது. இவ்வுரையினை நூலாசிரியர் வார்ப்புரை எனக் குறிப்பிடுகின்றார். இதே ஆண்டில் ‘நற்றிணை நயச் சொல்லோவியம்’ என்ற தலைப்பில் ‘கலைச்செல்வி புலியூர்க்கேசிகன்’ என்பவர் நூலொன்றை எழுதியுள்ளார். நற்றிணையின் நயமான 40 பாடல்களைத் தெரிவுசெய்து கட்டுரை வடிவில் எழுதியுள்ளார்.

**நற்றிணை : மொழிபெயர்ப்பு**

நற்றிணைக்கு இதுவரை ஐந்து மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன.1989-இல் பேராசிரியர் ஏ.வி.சுப்பிரமணியன் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் (Department of Development-Culture) வழியாக ‘NARRINAI’(An Anthology Of Amour) நற்றிணையினைப் மொழிபெயர்த்துள்ளார். 2001-இல் அ.தெட்சிணாமூர்த்தி ‘The Natrinai Four Hundred’ என்ற பெயரில் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் வழி மொழிபெயர்ப்பினைச் செய்துள்ளார்.

2008-இல் நீ.கந்தசாமி ‘NARRINAI Text and Translation’ என்ற தலைப்பில் நற்றிணையினை பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தின் வழி மொழிபெயர்த்துள்ளார். 2008-இல் ஈவா வில்டன் நற்றிணை (Annoted Translation vol.,I,II,III) எனத் தமிழ்மண் பதிப்பகத்தின் வழி மொழிபெயர்த்துள்ளார்.

2013-இல் வைதேகி ஹெர்பர்ட் நற்றிணையினை (Natrinai:Translation in English with Meaning – Vaidehi Herbert ) மொழிபெயர்த்துள்ளார். இது கொன்றைப் பதிப்பகத்தில் இருந்து வெளிவந்துள்ளது.

**நற்றிணை – எடுத்துக்காட்டுப் படிவம்**

தஞ்சாவூர் - தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் ஓலைச்சுவடித்துறை இணைப்பேராசிரியர் த.கோ.பரமசிவம் ‘நற்றிணை எடுத்துக்காட்டுப் படிவம்’ என்ற ஒன்றைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இது நற்றிணைக்கான பதிப்பியல் முறைமையினையும் பதிப்பியல் அறத்தையும் சுட்டிக்காட்டும் ‘மாதிரி- ஆய்வு’ படிவமாக அமைகிறது எனலாம். இது கடவுள் வாழ்த்து உட்பட முதல் பத்துப்பாடல்களுக்கான ஆய்வினை மட்டும் செய்துள்ளது. இது சிதம்பரம் ஸ்ரீ வேலன் பிரஸ் என்ற அச்சகத்தில் அச்சிடப்பெற்றுள்ளது. இது முன்னுரை, நற்றிணை மூலமும் உரையும், பாடவேறுபாடு ஒப்புநோக்கு அட்டவணை, பாட்டு முதற்குறிப்பு அகராதி, சிலகுறிப்புகள், தொடரடைவு, சொல்லடைவு என்ற அமைப்பு முறையில் செய்யப்பெற்றுள்ளது. இம் மாதிரிப்படிவ ஆய்விற்கு ஆசிரியர் ஆறு அச்சு நூல்களையும் இரண்டு காகிதப்படிகளையும் எடுத்துக் கொண்டுள்ளார். அவை வருமாறு:

1.கீழ்த்திசைச் சுவடி நூலக நற்றிணைச்சுவடி - காகிதப்படி (1893/94).

*2.மகா வித்துவான் ரா.இராகவையங்கார் சுவடி – காகிதப்படி(1899/குறிப்பு).*
*3.பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் பதிப்பு – அச்சுப்படி(1915).*
*4.பாட்டும் தொகையும், சங்க இலக்கிய மகாசமாஜப் பதிப்பு –அச்சுப்படி(1940).*
*5.மர்ரே சாக்கை ராஜம் பதிப்பு - அச்சுப்படி(1957).*
*6.சைவசித்தாந்தக் கழகப்பதிப்பு(பொ.வே.சோ.) - அச்சுப்படி(1962).*
*7.ஔவை சு.துரைசாமிப்பிள்ளை பதிப்பு - அச்சுப்படி(1966-1968).*
*8.புலியூர்க்கேசிகன் பதிப்பு – அச்சுப்படி(1967)*

இவற்றை ஒப்பிட்டு முதல் 10 (க.வா.1 + 9 பாடல்கள்) பாடல்களுக்கான சரியான மூலபாடங்களையும் உரைகளையும் ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். இப்படிவம் இணையதளத்தில் இருந்து தரவிரக்கம் செய்யப்பெற்றது. அதில் படிவம் உருவாக்கப்பெற்ற ஆண்டு குறிக்கப்பெறவில்லை.

**நற்றிணை : ஆய்வடைவு**

ஒரு நூற்றாண்டுகால நற்றிணைப் பனுவல்கள் எவ்வாறு உரையாசிரியர்களால் வாசித்தளிக்கப் பெற்றுள்ளன என்பதையும் நற்றிணைப் பதிப்புகள், வெளியீடுகளில் அமைந்த உட்கூறுகளையும் முன்வைத்துப் பின்வரும் ஆய்வடைவு உருவாக்கப் பெற்றுள்ளது.

| | பின். | சமா. | கழகம். | மர்ரே. | ஔவை. | எச்.வே. | புலியூர். | நா. இரா. | பொ.வே. சோ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடவேறுபாடு குறித்தல் | # | | # | | # | # | # | | |
| பதிப்பு முறையியல் சுட்டல் | | # | | | | | | | |
| பதப்பிரிப்புச் செய்தல் | | # | # | # | # | # | # | # | |
| பொழிப்புரை தருதல் | # | | # | | | | # | # | |
| துறைவி□க்கம் அளித்தல் | # | | # | | | # | | | |
| தொடர் தொடராக உரை அளித்தல் | | | | | # | | | | # |
| பதவுரை தருதல் | | | | | | # | | | # |
| ஆய்வுரை தருதல் | | | | | # | | | | |
| எளியவுரை | | | | | | | # | # | |
| ஆய்வு முன்னுரை | | | | | # | | | | |
| அரும்பதம் | # | | | | | # | # | # | |
| கருத்து வி□க்கம் | | | | | | # | # | | |
| இலக்கிய நயம் | | | | | | # | | | |
| இலக்கணக் குறிப்புகள் தருதல் | # | | | | # | | | | |
| □ப்புமைப் பகுதி | | | | | | # | | | |
| உள்ளுறை இறைச்சி | # | | | | | # | | # | |
| தொல்காப்பிய விதி பொருத்துதல் | | | | | | | # | | # |
| மெய்ப்பாடு, பயன் குறித்தல் | # | | | | | # | | | |
| உரையாசிரியர் உரை காட்டல் | # | | | | # | | # | | |
| சைவ சித்தாந்த நோக்கு | | | | | # | | | | # |
| சமற்கிருதமயமாக்க ஏற்பு | # | | | | | | | | |
| தனித்தமிழ் இயக்கப் பின்புலம் | | | | | # | | | | |

| | கு. வெ. பா. | கதிர் மகா. | அ.ப. பா. | ச.வே.சு. | வ.த.இரா. | மு.ரா. பெரு. | லே□ா தமிழ். | கலை.பு லி. | பிரபா. | எஸ். ஜெ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொழிப்புரை தருதல் | # | # | # | # | # | # | # | # | # | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| துறைவி□க்கம் அளித்தல் | # | | | | | | | | | |
| கவிதை நடை | | | | | | # | | # | | |
| அரும்பதம் | # | # | # | | # | | | | | |
| கொண்டுகூட்டு | | # | | | | | | | | |
| □ப்புமைப்பகுதி | # | | | | | | | | | |
| உள்ளுறை இறைச்சி | # | | | | | | | | | |
| எளியவுரை | # | # | # | # | # | # | # | # | # | # |

**நிறைவுரை**

1915 முதல் 2020 வரை நற்றிணைக்குப் பதிப்புகள், வெளியீடுகள், மொழிபெயர்ப்புகள் என 31 நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றில் சில நூல்கள் மறுபதிப்பாக்கம் பெற்றுள்ளன. ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலம் நற்றிணைப் பதிப்புகள் தொடர்ச்சியாகப் பல்வேறு நிலைகளில் வாசித்தளிக்கப்பெற்று வந்துள்ளன. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பதிப்பாசிரியர்களும் உரையாசிரியர்களும் தங்களின் புலமைத்திறத்திற்கு ஏற்பவும் தாங்கள் இயங்கிவந்த நிறுவனம் சார்ந்தும் நற்றிணையைப் பலவாறாகப் பதிப்பித்தும் வெளியிட்டும் வந்துள்ளனர். உரையாசிரியர்கள் தத்தம் புரிதலுக்கேற்ப உரைகளை எழுதியுள்ளனர். எளிமையாக்கம் என்ற பெயரில் இன்ன பாடத்திற்கு இன்ன உரை இருந்தால் சிறக்கும் என்று கருதியும் பொருள் கொண்டுள்ளனர். ஔவை சு. துரைசாமிப்பிள்ளை பாடவேறுபாட்டினை முன்வைத்துப் புதிய ஆய்வுப்பதிப்பினைச் செய்துள்ளார். அப்பதிப்பில் ஔவையின் தனித்தமிழ் இயக்கப் பின்புலமும் சைவசித்தாந்த நோக்கும் வெளிப்பட்டு நிற்கின்றன. பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயரின் முதற்பதிப்பில் அவரின் சமற்கிருத ஏற்பினைக் காண முடிகின்றது. பின்னத்தூராரின் முதற்பதிப்பிலிருந்து திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப்பதிப்புகள் கட்டமைப்பில் மாறுபாடு கொண்டமைவதோடு சைவசித்தாந்த நோக்கில் சிலவிடங்களில் உரைமாற்றங்களைச் செய்துள்ளன. பின் இணைப்பில் பின்னத்தூராரால் கண்டறிய இயலாத 234-வது பாடலைக் கண்டறிந்து சேர்த்துள்ளது. மர்ரே சாக்கை ராஜம் பதிப்பு 234-வது பாடலுக்குப் பதில் கூடுதலாக இரு பாடல்களைப் பின்னிணைப்பில் சேர்த்துள்ளது. 1962-இல் சைவசித்தாந்தக் கழகப்பதிப்பின் வழி வெளிவந்த பொ.வே.சோமசுந்தரனாரின் இலக்கணக்குறிப்பும் ஆய்வுரையும் கொண்ட நற்றிணைப் பதிப்பில் பாடத்தேர்வு குறித்த திறனாய்வுப் பதிவுகள் காணப்பெறுகின்றன. இன்னபாடத்திற்குப் பதில் இன்ன பாடம் சிறக்கும் எனக் கருத்துரைத்துள்ளார். சிலவிடங்களில் சைவசித்தாந்த நோக்கில் விளக்க முற்பட்டுள்ளார். எச். வேங்கடராமன் பதிப்புப் பாடங்களும் உரைகளும் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரின் பாடங்களையும் உரைகளையும் பெரிதும் ஒத்தமைகின்றன. பொருண்மையளவிலான மாற்றங்கள் ஏதும் அமையவில்லை. நற்றிணையினைப் பதிப்பித்த பதிப்பாசிரியர்கள், உரையாசிரியர்கள் மூலபாடங்களுக்கான தேர்வு முறைமைகளிலும் உரைகொள்ளுதலிலும் பெரும்பான்மை வேறுபடுகின்றனர். நற்றிணைப் பதிப்புகள் வெளியீடுகளின் வழியாக 24 உட்கூறுகள் அடையாளப் படுத்தப் பெற்றுள்ளன.

**சுருக்கக் குறியீடு**

| | |
|---|---|
| அ.ப.பா. | -அ.ப.பாலையன். |
| எச்.வே. | -எச்.வேங்கடராமன் |
| ஔ. | -ஔவை சு.துரைசாமிப்பிள்ளை |
| கதிர்மகா. | -கதிர்மகாதேவன் |
| கலை.புலி. | -கலைச்செல்வி புலியூர்க்கேசிகன் |
| கழகம் . | - சைவசித்தாந்தக் கழகப் பதிப்பு |
| கு.வெ.பா. | -கு.வெ.பாலசுப்பிரமணியன் |
| ச.வே.சு. | -ச.வே.சுப்பிரமணியன் |
| சமா. | -சைவசித்தாந்த மகாசமாஜப்பதிப்பு |
| நா.இரா. | -நா.இராமையாபிள்ளை |
| பிரபா. | -பிரபாகரபிரபு |
| பின். | -பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் |

புலி. -புலியூர்க்கேசிகன்
பொ.வே.சோ -பொ.வே.சோமசுந்தரனார்
லேனா. -லேனா தமிழ்வாணன்
வ.த.இரா. -வ.த.இராமசுப்பிரமணியன்
எஸ்.ஜெ. -எஸ்.ஜெகத்ரட்சகன்

**துணை நின்றவை**

*(நற்றிணைப் பதிப்புகள்,வெளியீடுகள்,மொழிபெயர்ப்புகள்,ஆய்வுநூல்கள்)*


- அமிர்தலிங்கம் சு.,சங்க இலக்கியக் களஞ்சியம், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்,2000.
- ஆறுமுகம் ப.,பாட்டும் தொகையும் என் உரை, ஸ்ரீநிதி பதிப்பகம்,திருச்சிராப்பள்ளி, 2010.
- இராமையா பிள்ளை நா., நற்றிணை மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம்,சென்னை, 1999.
- ஈவா வில்டன், நற்றிணை (Annoted Translation vol.,I,II,III),தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2008.
- கந்தசாமி நீ., NARRINAI Text and Translation, பிரெஞ்சுஆய்வுநிறுவனம், பாண்டிச்சேரி, 2008.
- கோவிந்தன் கா.,நற்றிணை, மலர் நிலையம்,சென்னை,1956.
- சஞ்சீவி ந.,சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1973.
- சண்முகம்பிள்ளை மு.,சங்க இலக்கியம் பாட்டும் தொகையும், பாரிநிலையம், சென்னை, 1967.
- சுப்பிரமணியன் ஏ.வி., NARRINAI (An Anthology Of Amour), தமிழ்ப் பல்கலைக் கழகம், (Department of Development-Culture), தஞ்சாவூர், 1989.
- சுப்பிரமணியன் ச.வே., நற்றிணை தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம்,சென்னை, 2009.
- சுப்பிரமணியன் ச.வே., சங்க இலக்கியங்கள்,மணிவாசகர் பதிப்பகம்,சென்னை, 2006.
- சுப்பிரமணியன் ச.வே., தமிழ்ச்செவ்வியல் நூல்கள், மணிவாசகர் பதிப்பகம்,சென்னை, 2008.
- சுப்பிரமணியன் ச.வே., நற்றிணை மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2009.
- தமிழ்வாணன் லேனா.,நற்றிணை, மணிமேகலை பிரசுரம், சென்னை, 1989.
- துரைசாமிப்பிள்ளை சு., நற்றிணை மூலமும் விளக்கவுரையும், அருணா பப்ளிகேஷன்ஸ் , சென்னை, 1966.
- தட்சிணாமூர்த்தி அ.,The Natrinai Four Hundred, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2001.
- நாராயணசாமி ஐயர் அ., எட்டுத்தொகையுளொன்றாகிய நற்றிணை , சைவவித்யாநுபாலன யந்திரசாலை, சென்னை, 1915.
- நாராயணசாமி ஐயர் அ., நற்றிணை மூலமும் உரையும், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1952.
- நாராயணசாமி ஐயர் அ., நற்றிணை மூலமும் உரையும், பொ.வே.சோ. இலக்கணக்குறிப்பும் ஆய்வுரையும், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1965.
- பசுபதி ம.வே., தமிழ்ச் செவ்வியல் நூல்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2010.
- பரமசிவம் த.கோ., நற்றிணை மூலமும் உரையும் (எடுத்துக்காட்டுப் படிவம்), ஓலைச்சுவடிப் புலம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
- பரமசிவன் மா,.அகநானூற்றுப் பதிப்புப் பின்புலம், காவ்யா பதிப்பகம், சென்னை, 2012
- பழனியப்பன் வெ., தமிழ் நூல்களில் பாடவேறுபாடுகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1956.
- பாலசுப்பிரமணியன் கு.வெ., நற்றிணை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

- பாலாஜி க., நற்றிணைப் பதிப்பு வரலாறு, காவ்யா பதிப்பகம், சென்னை, 2010.
- பாலையன் அ.ப., நற்றிணை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை,2009.
- பிரபாகரபாபு, நற்றிணை மூலமும் உரையும்,தமிழ்க்கவிப் பதிப்பகம், சென்னை,2019.
- புலியூர்க்கேசிகன், நற்றிணை ,பாரிநிலையம்,சென்னை, 1967.
- பெருமாள் முதலியார் மு.ரா., இன்றைய சொற்களில் அன்றைய நற்றிணை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1986.
- மகாதேவன் கதிர், நற்றிணை மூலமும் உரையும்,கோவிலூர் மடாலயம், 2003.
- மாதையன் பெ., சங்க இலக்கியச் சொல்லடைவு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2007.
- ராஜம் சாக்கை மர்ரே, நற்றிணை, மர்ரே அண்ட் கம்பெனி, சென்னை, 1957.
- விசாலாட்சி ந., பழந்தமிழ்ப் பதிப்புகள், சரஸ்வதி பதிப்பகம், சென்னை, 1990.
- விநாயகமூர்த்தி அ., மூலபாட ஆய்வியல், பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,மதுரை, 1995.
- வேங்கடராமன் எச்., நற்றிணை மூலமும் உரையும், உ.வே.சா. நூல் நிலையம், பெசன்ட் நகர் சென்னை, 1989.
- வைதேகி ஹெர்பர்ட், Natrinai:Translation in English with Meaning, கொன்றைப் பதிப்பகம், சென்னை, 2013.
- ஜெகத்ரட்சகன் எஸ்.,நற்றிணை, ஆழ்வார்கள் ஆய்வு மையம், சென்னை, 2017.